முருகப்பெருமான் துணை

**மகான் காரிநாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.02.2023, வெள்ளிக்கிழமை

1. அரங்கமகா ஞான சித்தே
அறமாக அருளாக மக்களுக்கு
வரங்கள்தரும் ஞான முக்தே
வள்ளலே உன் பெருமைகூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
குறைவிலா பஞ்சதிகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 05 ம் நாள், 17.02.2023 வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு காரிநாயனார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உயர்விலா கலியின் கொடுமை
ஞானமிலா எங்கும் அதர்மமாகி
நம்பகமிலா ஆளுமையாகி வர
4. வருங்காலம் இயற்கை சீற்றமாகி
வதைகள் பெருக நேரும்
தருங்குணம் இல்லா தயவிலா
தலைமைகள் இன்னும் இருக்க
5. இருக்கவே ஆளுமை வழியில்
இருக்கும் அதிகார பலங்களும்
வருத்தமின்றி தவறுகள் கூட்டி
வதைகள் மக்களின் மேல் தொடர
6. தொடருகின்ற இவை கொடுமை
தொடர்ந்தால் புவி குலுங்கி
இடர் பேரிடராக மாறியே
எல்லாம் தலைகீழாக மாறும்
7. மாறுதல் நிகழா புவிதன்னில்
மக்களுக்கு உயிர் பாதுகாப்பு
ஆறுதலான வாழ்வாதாரமாக
ஆளுமை அதிகார நிலை கொண்டவர்கள்
8. கொண்டவர்கள் தயவு நிலைதனை
கொள்கையாக மாற்றி இனி
தண்டாயுதப் பெருமானை வணங்கி
தருமவழி ஆதரித்து வந்து
9. வந்துமே ஞான அவதாரமான
வள்ளல் அரங்கனை ஏற்று
சிந்தை வைத்து செபதபங்கள்
சித்தம் தெளிய வேண்டிவர

10. வருகவே அகிலம் எங்கிலும்
வல்லமை கூடி பாதுகாப்பு
தரும ஞான பலமாகக் கூடி
தக்கபடி அழிவுகள் அனுகா

11. அனுகா பெரும் சக்தியான
அறத்தால் உலகம் தானும்
ஞானபூமி ஞான ஆட்சியாக
நல்கதிநிலை கண்டு மாறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–